# தமிழ்ப் பல்கலைக்கழகம் - தஞ்சாவூர் – 613 010,

**சிற்றுண்டி விடுதி**

**ஒப்பந்தபுள்ளி நிபந்தனைகள்**

**ஒப்பந்தப்புள்ளி படிவம் விண்ணப்பிப்பதற்கான தகுதிகள்.**

1. ஒப்பந்தத்திற்கான விண்ணப்பதாரர் தனியார் நிறுவனம் ஆகவோ பொது நிறுவனம் ஆகவோ அல்லது கூட்டு நிறுவனமாகவோ (Firm) இருக்கலாம். வருடம் ஒன்றுக்குக் குறைந்த பட்சம் ரூபாய் 05 லட்சத்திற்குக் குறைவில்லாமல் வரவு – செலவு செய்ததற்குச் சான்று கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு இணைக்கப்பட வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ளும் தனியார் நிறுவனங்கள் அரசு அங்கீகாரம் பெற்று பதிவு செய்யப்பட்டதாக இருக்க வேண்டும். 3 வருடத்திற்கு முன் அனுபவ சான்று இணைக்கப்படவேண்டும்.
3. ஒப்பந்தப்புள்ளிதாரர் தனது நிரந்தரக் கணக்கு எண் அட்டை (Pan Card) நகல் இணைக்கவேண்டும்.
4. ஏற்கெனவே ஒப்பந்தக்காரராக இருந்து நிபந்தனைகளின்படி நடக்க தவறியவர்கள் அவர்களது ரத்த உறவினர்கள், 21 வயது பூர்த்தி அடையாதவர்கள், தமிழ்ப் பல்கலைக்கழக பணியாளர்கள் அவர்களது ரத்த சம்பந்தமான நெருங்கிய உறவினர்கள் மற்றும் தமிழ்ப் பல்கலைக்கழகம் மீது வழக்கு தொடர்ந்தவர்கள் ஆகியோர் ஒப்பந்தப்புள்ளி அளிக்க தகுதியற்றவர்களாகக் கருதப்படுவர்.

**ஒப்பந்தப்புள்ளி திறப்பதற்கும், ஏற்றுக்கொள்வதற்கான நிபந்தனைகள்.**

10.முதல் உறையில் ஒப்பந்தக்காரரது தகுதிகாண் விவரங்களை வைத்து மூடி முத்திரையிட்டும் (Technical bid) இரண்டாவது உறையில் விலை விகிதம் குறிப்பிட்டும் EMD – க்கான வரைவோலையுடனும், மூடி முத்திரையிட்டும் (Financial bid) மூன்றாவது உறையில் இந்த இரண்டு உறைகளையும் வைத்து மூடி முத்திரையிட வேண்டும். ஒவ்வொரு உறையின் மீதும் தகுதிகாண் படிவம் மற்றும் விலை விகித படிவம் எனத்தனித்தனியாக எழுதப்பட்டு மூன்றாவது உறையில் மேற்கண்ட இரண்டு உரைகளையும் வைக்கவேண்டும்.

11.இரு உறைகள் முறையில் நடத்தப்படும் ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்தப்புள்ளி திறப்பன்று தகுதிகாண் படிவம் உள்ள உறை (Technical bid) முதலில் திறக்கப்படும். அதனைத் தொடர்ந்து தகுதியுடைய ஒப்பந்தக்காரரின் விலை விகித படிவம் (Financial bid) திறக்கப்படும்.

12.ஒப்பந்தப்புள்ளி காப்புத் தொகை செலுத்தியதற்கான இரசீது வங்கி வரைவோலை மற்றும் அசல் சான்றிதழ் இணைக்கப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், தொகையில் அடித்தல், திருத்தல் செய்யப்பட்டு இருந்தாலும், கையொப்பமிடாது இருந்தாலும், ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

13.ஒப்பந்தப்புள்ளி அறிக்கையினைப் பக்க வாரியாக (Page) அட்டவணையிட்டு பொருளடகத்தில் (Index) தெரிவிக்கவேண்டும்.

1. நிறுவனங்களின் விபரங்கள் அதிகமாக இருப்பின் தனி இணைப்பாக கொடுக்கவேண்டும்.
2. விண்ணப்பதாரர் கடந்த 2 வருடங்களில் எந்த ஒரு வாடிக்கையாளராலும் தண்டிக்கப்படவோ அல்லது தன்மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்படவோ இல்லை என்பதற்கான பிரமாணப்பத்திரம் ஒன்றை வழங்க வேண்டும்.
3. ஒப்பந்தப்புள்ளி அளிக்கும் நிறுவனம் குறிப்பிடும் விலைப்புள்ளி தொகைக்கு விரிவாக குறிப்பு (Break up Details) ஒன்றை இணைக்கவேண்டும்.
4. ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த சதவீதம் சேவைக்கட்டணமாக குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்ததாரர் L1 என முடிவு செய்யப்பட்டு, விலைக்குறைப்பிற்கு பின்னர் ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்படும்.
5. ஒப்பந்தப்புள்ளியில் ஒரே விலைப்புள்ளி இருப்பின் நிறுவனதாரர் / மற்றும் பணியாளர்களின் அனுபவத்தின் அடிப்படையில் L1 என முடிவு செய்யப்படும்.
6. எந்தவொரு காரணமும் கூறாமல் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ அல்லது ஒப்பந்தப்புள்ளியை நிறுத்தி வைக்கவோ, தமிழ்ப் பல்கலைக்கழக நிருவாகத்துக்கு அதிகாரம் உண்டு.
7. ஒப்பந்தப்புள்ளி தமிழ்ப் பல்கலைக்கழகச் சட்ட விதிகளுக்கும் பல்கலைக்கழக நிருவாகத்தின் ரத்து அங்கீகாரத்திற்கும் உட்பட்டது ஆகும்.

**ஒப்பந்தம் அளித்தப் பிறகு நிறுவனத்தாருக்கான நிபந்தனைகள்.**

1. ஒப்பந்தக்காரர் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி தமிழ்ப் பல்கலைக்கழக நிருவாகத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டால், ஏற்று கொண்ட நாளிலிருந்து 7 தினங்களுக்குள் தனது சொந்த செலவில் உடன் ரூ.100/-க்கான முத்திரைத்தாளில் ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை ஏற்று ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் வேறு பெயர்களுக்கு மாற்றத்தக்கதல்ல
3. நிபந்தனைகளை மீறினாலோ, பின்பற்ற தவறினாலோ உணவுத் தரம் குறைந்தாலோ, ஒப்பந்தக்காரர் நிபந்தனைப்படி நடக்கவில்லை என பல்கலைக்கழக நிருவாகம் கருதினாலும்,

ஒப்பந்தக்காரருக்கு எவ்வித காரணமும் கூறாமல் ஒப்பந்தத்தை ரத்து செய்திட நிருவாகத்திற்கு அதிகாரம் உண்டு.

4. விண்ணப்பத்தாரரால் தெரிவிக்கப்பட்டிருக்கும் தகவல்கள் பொய்யானவை என தெரிய வருமானால் முன்வைப்புத் தொகை திருப்பித்தரமாட்டாது.
5. குழந்தைத் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதை பல்கலைக்கழக நிருவாகம் சட்டப்படி அனுமதிக்காது.
6. உணவுப் பொருட்கள் தரம் சுவை திருப்திகரமாக இல்லையெனில், ஒப்பந்தத்தை இரத்து செய்ய பல்கலைக்கழக நிருவாகத்திற்குப் பூரண உரிமையுண்டு.
7. ஒப்பந்தப்புள்ளி அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தாருக்கும் பல்கலைக்கழகம் சார்பாக வழங்கப்படும் தளவாடப் பொருட்களை நல்ல முறையில் பராமரித்து ஒப்பந்த காலம் முடியும்பொழுது ஒப்பந்தத்தாரர் பல்கலைக்கழகத்திடம் மீள ஒப்படைக்கப்பட வேண்டும். அவ்வாறு மீள வரப்பெறாத தளவாடப் பொருட்களுக்கு வைப்புத்தொகையில் பிடித்தம் செய்யப்படும்.
8. சிற்றுண்டி விடுதி ஒப்பந்தபுள்ளிக்கு முன் வைப்புத் தொகையாக ரூ 25000/- The Registrar, Tamil University, Thanjavur – 613 010 என்ற பெயருக்கு வரைவோலை (D.D) எடுத்து படிவத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
9. சிற்றுண்டி விடுதி பராமரிப்புப் கட்டணம் ரூ 1000/- மும், மின்சாரக்கட்டணம் மாதம் தொரும் கணக்கிட்டு பல்கலைக்கழக ....................................வங்கிக் கணக்கில் .........தேதியில் செலுத்த வேண்டும்.
10. ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை மீறினால் இப்பணிக்கான ஒப்பந்தம் ரத்து செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படும். காப்புத் தொகையாக செலுத்திய தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது.

குறிப்பு

- நியாயமான வேறு நிபந்தனைகள் இருந்தால் ஒப்பந்தப்புள்ளிகள் திறப்பு நேரத்தில் தெரிவிக்கப்படும்.

பதிவாளர்(பொ.)

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.